# B

SL. No. : N

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 ]
Total No. of Questions : 50 ]

**CCE RR**
**REVISED & UN-REVISED**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
## Subject : First Language — TAMIL
### ( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )
### ( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ/ Regular Repeater )

ದಿನಾಂಕ : 22. 06. 2018 ] [ Date : 22. 06. 2018

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 50-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலது கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

## பகுதி அ

I. ஒரு தொடரில் விடை தருக : 11 × 1 = 11

1. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார் ?
2. சீதை அனுமானிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?
3. திருமகள் எங்கு குடிபுகுந்து மகிழ்ந்திருக்கிறாள் ?
4. காளைகளுக்குச் சொல்வது போல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் உரைப்பது யாது ?
5. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?
6. யந்திரங்களாக மாறுகிறவர்கள் எதை நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள் ?
7. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?
8. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் பகுதி ?
9. ஆதி புராணத்தின் மூலநூல் யாது ?
10. தமிழர்களைப் பழித்த வடவரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 9 × 2 = 18

12. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?
13. மாதங்கம், பகடு, கம்பமா என்ற பாணனின் சொற்களுக்கு பாடினி உணர்ந்து கொண்ட பொருள்கள் முறையே யாவை ?
14. தலைவி தயிரைப் பிசைந்து சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினை எழுதுக.
15. பேராசிரியர் சேதுபிள்ளையின் உரையாடல் எத்தகையது ?
16. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.
17. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?
18. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினைக் குறிப்பிடுக.

19. மோனை என்றால் என்ன ?

20. இரட்டுறமொழிதல் என்றால் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $9 \times 3 = 27$

21. அசோகவனத்தில் சீதை இருந்த நிலையை அனுமான் எவ்வாறு விளக்கினான் ?

22. 'பலா'வை விட 'களா' சிறந்தது என்று ஈரோடு தமிழன்பன் எவ்வாறு விளக்குகிறார் ?

23. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பிவர நேரும் ? அதன் விளைவு எது ?

24. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

அல்லது

வேற்றுமை அணியை விளக்குக.

25. "ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல்" என்ற பழமொழியை விளக்குக.

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

26. "அறத்தான் வருவதே இன்பம்"

27. "இதுதான் ஓசோனுக்கு எமன்"

28. "திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன்தான் ஆனால் இன்னமும் அவன் இறந்துவிடவில்லை"

29. "எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்"

IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: $3 \times 4 = 12$

30. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை விளக்குக.

*அல்லது*

பெண் விடுதலை குறித்து பாரதியார் கூறுவனவற்றை எழுதுக.

31. சேதுப்பிள்ளையவர்கள் "இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம்" என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.

*அல்லது*

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நம் முன்னோர்களிடம் இருந்தது என்பதைச் சான்றுடன் விளக்குக.

32. தீப்பெட்டி தொழிற்சாலைக்குச் சென்று வரும் குழந்தைகளைப் பற்றி எழுதுக.

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

V. அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

33. "சோதியாய்த் தோன்றும் ....." என வரும் இறைவாழ்த்துப் பாடல்.

*அல்லது*

"ஈன்று புறந்தருதல் ..." என வரும் புறநானூற்றுப் பாடல்.

VI. 34. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியாரின் கூற்றுப்படி பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். விண்வெளிப் பயணம், விளையாட்டுப் போட்டி என உலக நாடுகளின் கவனத்தை நம் நாட்டுப் பெண்மணிகள் ஈர்த்து வருகின்றனர். பி.டி. உஷா, கர்ணம் மல்லேஷ்வரி, அசுவினி நாச்சப்பா, ஷைனி ஆப்ரகாம் முத ய விளையாட்டு வீராங்கனைகள், விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரிந்து நம் நாட்டின் பெருமையினை உலகிற்கு உணர்த்தினர். இவர்களுடைய வரிசையில் தடகளப் போட்டியில் சாதனை படைத்தவர் அஞ்சு பாபி ஜார்ஜ். இவர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றதன் மூலம் தடகளப் போட்டிகளில் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்..

வினாக்கள்:

i) பெண்களைப் பற்றி பாரதியின் கூற்று என்ன ?

ii) விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த சில பெண் வீராங்கனையர் பெயர்களை எழுதுக.

iii) தடகளப் போட்டியில் சாதனை படைத்தவர் யார் ?

iv) அஞ்சு பாபி பெற்ற பெருமை யாது ?

## பகுதி ஆ

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

35. வயலும் வயல் சார்ந்த இடமும் .......................................... .

(A) மருதம் (B) குறிஞ்சி

(C) பாலை (D) நெய்தல்.

36. வாழ்க வாழ்க என்பது .......................................... .

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) அன்மொழித் தொடர் (D) வேற்றுமைத் தொடர்.

37. இரண்டு சீர்களை உடையது .................................. .

(A) சிந்தடி (B) அளவடி

(C) குறளடி (D) நெடிலடி.

38. சொல்லோ, தொடரோ இரு பொருள் படுமாறு பாடுவதும் பேசுவதும் .................................. .

(A) முரண் (B) இரட்டுற மொழிதல்

(C) பிறிதுமொழிதல் (D) எதுகை தொடர்.

39. அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்.

\- இதில் அமைந்துள்ள தொடை ................................ .

(A) முரண் (B) எதுகை

(C) மோனை (D) இயைபு.

40. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் என்பது ........................................ .

(A) வெட்சி (B) நொச்சி

(C) வாகை (D) கரந்தை.

41. வகுப்பு சிரித்தது. இது ........................................ .

(A) காலவாகு பெயர் (B) தொழிலாகு பெயர்

(C) இடவாகு பெயர் (D) சினையாகு பெயர்.

42. செய்யுளுக்கு உரிய சொல் ........................................ .

(A) கடிச்சொல் (B) உரிச்சொல்

(C) புகழ் (D) உவகை.

43. அகவல் ஓசை உடையது ........................................ .

(A) ஆசிரியப்பா (B) வெண்பா

(C) வஞ்சிப்பா (D) க ப்பா.

44. செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவது ........................................ .

(A) அணி (B) அடி

(C) பா (D) தொடை.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: 4 × 1 = 4

45. ஒற்றெழுத்துகள் நீண்டு ஒ ப்பது : ஒற்றளபெடை

உயிர் எழுத்துகள் நீண்டு ஒ ப்பது : .................................................. .

46. பாமர மக்களின் பழமைமொழி : பழமொழி

விடுவிக்கப்பட வேண்டிய கதை : ................................ .

47. கல் + குகை : கற்குகை

பல் + பொடி : ............................................... .

48. விலங்குகளுக்கு மருத்துவமனை கட்டியவன் : அசோகன்

கண்ணகிக்குக் கோயில் கட்டியவன் : .......................................... .

## பகுதி இ

IX. 49. உனது பிறந்தநாள் விழாவிற்கு வருமாறு சென்னையில் இருக்கும் உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று எழுதுக. $1 \times 5 = 5$

*அல்லது*

நீ வாழும் பகுதியில் தூய்மையான குடிநீரில் கழிவு நீர் கலப்பதை விளக்கி தகுந்த தலைப்புடன் 'தினகரன்' நாளிதழுக்கு செய்திக் குறிப்பு எழுதுக.

X. 50. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக: $1 \times 5 = 5$

அ. கைபேசியின் நன்மைகள்

ஆ. இயற்கைச் சீற்றம்

இ. பொங்கல் விழா.